**<u>அலுவலககுறிப்பு</u> : பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.**

**ந.க.எண்.3490/2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 601 நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**29 ).** இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு. வீ. விமல் என்பவர் எவ்வித தகவலும் தராமல் நீண்ட நாட்களாக பணிக்கு வராமல் இருந்தமையால் தினதந்தி தினசரியில் விளம்பரம் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.**4645/–** க்கு தொடர்புடைய தினசரி நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. அவற்றினை தொடர்புடைய தினதந்தி நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும், செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1432/2022/சி1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 602 நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**30).** மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டம் **2022-2023** (MPLADP)-ன் கீழ் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் விளம்பரம் செய்திட, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், மயிலாடுதுறை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண். **5451/2022/இ1** , நாள்.**05.09.2023** மூலம் தெரிவிக்கப்பட்டதன்படி மேற்படி விளம்பரம், தினபூமி தினசரி நாளிதழில் **23.09.2023** அன்று பிரசுரம் செய்யப்பட்டதை தொடர்ந்து பிரசுர கட்டணத் தொகை ரூ.**13,621/-** (ரூபாய் பதிமூன்றாயிரத்து அறநூற்று இருபத்து ஒன்று மட்டும்) வழங்கிட கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது**.** எனவே இச்செலவின தொகையை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.**

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5035/2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 603. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**31).** மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரியின் 75-ம் பவளவிழாவில் கலந்து கொள்ள 24.08.2023 அன்று வருகை புரிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வரவேற்றும், இந்நகராட்சிக்கு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.152.78 கோடி நிதி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளின் விவரத்தினை தினகரன், மாலைதமிழகம், தினமணி, தினத்தந்தி ஆகிய நான்கு தினசரி நாளிதழ்களில் 24.08.2023 அன்று பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி நான்கு தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதை தொடந்து பிரசுர கட்டணம் ரூ.93,870 /- (ரூபாய் தொண்ணுற்றாயிரத்து எண்ணுற்று எழுபது மட்டும்) வழங்கிட கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4448/2023/இ1
**<u>மன்றத் தீர்மானம் எண். 604. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**32 ).** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **2008**ஆம் ஆண்டு முதல் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுகிறது. இப்பணியில் **5.85** MLD செயல்திறனுக்கு Waste Stabilization Pond முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும், நகரின் கழிவுநீர் சேகரிப்பு முறையில் **87.34** கி.மீ. தூரம் கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள், **7.780** கி.மீ. தூரம் கழிவு நீரேற்று குழாய்கள், **3425** எண்கள் ஆய்வு குழிகள், ஏழு கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் எட்டு கழிவு நீரேற்று நிலையங்களும் உள்ளன.

இப்பணியின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்காக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.(ms)**113**,நாள்:**17.8.2022**ன்படி விதிமுறைகள் மற்றும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அரசாணையின் வழிகாட்டு நெறிமுறைப்படி TWAD, PWD மற்றும் Collectorate ஊதியப்பட்டியலில் எது குறைவோ அதன் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் Private service provider/Contractor/Agency to operate and maintain the UGSS on contract basis for a period of three years-க்கு நிர்வாக அனுமதி பெற வேண்டும். இப்பணிக்காக வழங்கப்படும் நிர்வாக அனுமதி உயர்ந்தபட்சம் மூன்று ஆண்டுகள் வரை தான் பொருந்தும் என தெளிவுரை வழங்கப்பட்டுள்ளன. அதன்படி இந்நகராட்சி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் சேகரிப்பு முறையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நெறிமுறைகள்படி **43** களப்பணியாளர்களை கொண்டு பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்காக ஓராண்டு செலவினத்திற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு செலவினம் ரூ.**1,20,00,000/-**க்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் பரிந்துரை வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தினை **2023-24**ஆம் நிதியாண்டு நகராட்சி பொது வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 7724/2023/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 605. நாள்: 07.11.2023**

**அலுவலக குறிப்பு: அலுவலககுறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**33 ).18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ச. காந்திராஜா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18. உள்ள ஆறுபாதி வாய்க்காலிலிருந்து காவேரி ஆறு வரை உள்ள தெரு தற்போது **"பிணம்போக்கி தெரு"** என நகராட்சி பதிவேடு, வாக்காளர் பட்டியலில் உள்ள பெயரினை மாற்றம் செய்து **"டபீர் தெரு விரிவாக்கம்"** என மாற்றம் செய்திட மன்றம் தீர்மானிக்க.
2. மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 உள்ள தற்போது **"தைக்கால் தெரு"** என்று உள்ளதை திருத்தம் செய்து **"பெரிய தைக்கால் தெரு"** என மாற்றம் செய்திட மன்றம் தீர்மானிக்க.
3. எனது வார்டுக்குட்பட்ட தெற்கு குமரக்கட்டளை தெருவில் பொது மக்களுக்கு குடிநீர் பொது குடிநீர் வசதி இல்லாததால் மிகுந்த சிரமப்பட்டு கொண்டு இருக்கிறார்கள். எனவே, மேற்படி, இடத்தில் மினிபவர் பம்பு அமைத்திட மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 606. நாள்: 07.11.2023**

**அலுவலக குறிப்பு:**

**34).12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஹேமாவதி அருள்குமார் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட பகுதியில் உள்ள கவிஞர் வேதநாயகம் நகராட்சி தொடக்கப்பள்ளியின் மீதம் உள்ள பணிகள், விளையாட்டு மைதானம், கூடுதல் வகுப்பறைகள், கழிவறைகள் அனைத்து பணிகளையும் மிகவும் விரைவில் முடித்துதர மன்றம் தீர்மானிக்க.
2. தனது வார்டுக்குட்பட்ட தெற்கு சாலிய தெருவில் உள்ள பாதாள சாக்கடை மேல்மூடி உட்புறம் இடிந்து சரிந்து பள்ளமாக உள்ளது. அதனை கவனிக்காமல் வாகன ஓட்டிகள் பலமுறை விழுந்து விபத்து ஏற்படுகிறது. எனவே, இதற்கான பணியை விரைவில் முடிக்க மன்றம் தீர்மானிக்க.
3. தனது வார்டுக்குட்பட்ட பெரிய சாலிய தெருவில் பாதாளசாக்கடை உடைப்பு ஏற்பட்டு பாதாள சாக்கடை நீர் தெருக்களில் வழிந்து ஓடுவதால், டெங்கு மலேரியா போன்ற தோற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதால் பொது மக்கள் நலன்கருதி இந்த பாதாள சாக்கடை உடைப்பை நிரந்தரமாக சரிசெய்ய மன்றம் தீர்மானிக்க.
4. தனது வார்டுக்குட்பட்ட தெருக்களில் உள்ள குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தி பராமரிக்கவும், மின்துறை ஊழியர்கள் வெட்டும் மரக்கிளைகளை அப்புறப்படுத்தாமல் அப்படியே தெருக்களில் விட்டு செல்வதால் அதனை அப்புறப்படுத்தி, விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்க, மன்றம் தீர்மானிக்க.
5. தனது வார்டுக்குட்பட்ட இடங்களில் சுமார் இரண்டு, மூன்று மரங்கள் போக்குவரத்துக்கு இடையூராகவும், விபத்து ஏற்படுத்தும் வண்ணம் உள்ளதை அப்புறப்படுத்த மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 607. நாள்: 07.11.2023**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நகராட்சிகளின் நிதி நிலைக்கேற்ப பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டது.**

**35).** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 16.09.2023-ம் தேதிய கடிதம் மற்றும் காணொளி ஆய்வுக்கூட்டத்தில், மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களில் தற்போது நடைமுறையில் உள்ள மூன்றாண்டு குத்தகையினங்கள் மற்றும் 9 ஆண்டு குத்தகையினங்களில், முறையற்ற மற்றும் நீக்கம் செய்ய வேண்டிய வரியில்லா இனங்களில் உள்ள குறைபாடுகளை களைவதற்கு ஏதுவாக வரியில்லா இனங்களில் உள்ள மொத்த கேட்பு பட்டியலை கணினி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட வரியில்லா இனங்களின் கேட்பு பட்டியலுடன் ஒப்பிட்டு சரி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.559/2023/அ2, நாள்.09.10.2023-ன்படியும் மற்றும் காணொளி ஆய்வுக்கூட்டத்தின்படியும் மேற்கண்ட பொருள் தொடர்பாக வரியில்லா இனங்களில் உள்ள குறைபாடுகள்/குளறுபடிகள் ஆகியவற்றை சரிசெய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில் இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.5230/2023/அ2, நாள்.20.10.2023-ன்படி மயிலாடுதுறை நகராட்சியில் 2023-24-ம் நிதியாண்டில் அனைத்து குத்தகை இனங்களில் நடைமுறையில் இல்லாத குத்தகையினங்களை கண்டறிந்து, UTIS-லிருந்து நீக்கம் செய்திட, நேரடியாக கள ஆய்வு செய்வதற்கு மேலாளர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர்(சிறப்பு) ஆகியவர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில் கீழ்கண்ட விவரப்படி, இரட்டிப்பு கேட்புகள், பூஜ்ஜியம் கேட்புகள் ஆகியவற்றை நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| ASS.NO | DEMOLISHED ITEMS-15 | BALANCE |
|---|---|---|
| 097/79 | 1.KORANAD ASPESTAS SHOP NO1, | 0 |
| 097/80 | 2.KORANAD ASPESTAS SHOP NO2 | 0 |
| 097/49 | 3.TEMPERORY BUS STAND STDBOOTH, | 0 |
| … | 4.THIMMANAYAKKAN SUDUKATTU THALAM | 0 |
| … | 5.VALLALAGARAM SUDUKKATTU THALAM, | 0 |
| … | 6.VIJAYA THEATRE VIA ADIMANAI | 0 |
| 097/115 | 7.BARMA PETTY SHOPS -1 | 0 |

| | | |
|---|---|---|
| 097/116 | 8.BARMA PETTY SHOPS -2, | 0 |
| 097/117 | 9.BARMA PETTY SHOPS -3 | 0 |
| 097/120 | 10.BARMA PETTY SHOPS -6, | 0 |
| … | 11.PETTY SHOP, | 0 |
| 097/123 | 12.SUNGA BUILDING-3, | 0 |
| … | 13.BUS STAND WESTSIDE TAXY STAND | 0 |
| … | 14.BUS STAND ADIMANAI NO-34, | 0 |
| … | 15. RAILWAY CROSS ROAD FISH FEES CHARGES | 0 |
| **DUPLICATE ITEMS-4** | | |
| 097/20061 | 16.MUNICIPAL LODGE FEE COLLECTION | 0 |
| 097/118 | 17.BARMA PETTY SHOPS -4 | 0 |
| … | 18.KITTAPPA ANGADI BACKSIDE SHOP NO-1, | 0 |
| 097/2009017 | 19.T.V.K.MARKET 46 NEW SHOPS | 0 |

**அலுவலகக்குறிப்பு:** வரியில்லா இனங்களின் முதன்மை பட்டியலிலிருந்து (Master list) நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.5230/2023/அ2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 608. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**36)** மயிலாடுதுறை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அறிவுரையின்படி இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 83 எண்ணிக்கையிலான குளங்களை ஒன்றுடன் ஒன்றாக இணைத்து தொடர்ந்து நீர்வரத்து பெற்றிட ஏதுவாக மேற்படி 83 குளங்களையும் இணைக்கும்படி மழைநீர் வடிகால் அமைத்திட விரிவான திட்ட கருத்துரு தயார் செய்து, நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்றிடவும், இதற்கான நிதி ஒதுக்கீட்டினை அரசிடம் முழு மானியமாக பெறுவதற்கு விரிவான திட்ட கருத்துரு தயார் செய்து அதனை நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் TUFISL நிறுவனத்திற்கு சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 609. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**37).** இந்நகராட்சி வார்டு எண்.28 சின்ன மனவெளித்தெருவில் உள்ள மின் இணைப்பு எண்.522–010–859இல் கூடுதலாக மூன்று எண்ணிக்கை மின்கம்பங்கள் அமைத்து அதில் தெருவிளக்க வசதி அமைத்திட உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நகரம் மேற்கு அவர்களிடம் மதிப்பீடு கோரப்பட்டதில் ரூ.24,601/–ஐ செலுத்திட கோரி உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நகரம் மேற்கு அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. ஏனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 5087/2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 610. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**38).** இந்நகராட்சி வார்டு எண்.06 பெருமாள் கோவில் தெற்கு வீதி மற்றும் தோப்புத் தெருவினை இணைக்கும் சாலையில் புதியதாக 8 எண்ணிக்கை மின்கம்பங்கள் அமைத்து அதில் தெருவிளக்க வசதி அமைத்திட இளமின் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நகரம் கிழக்கு அவர்களிடம் மதிப்பீடு கோரப்பட்டதில் ரூ.3,48,050/–ஐ செலுத்திட கோரி இளமின் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நகரம் கிழக்கு அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. ஏனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 5087/2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 611. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**39).** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 தோப்பு குளத்தின் சுற்று பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி மற்றும் குளத்தின் நான்கு கரைகளையும் ஸ்திரப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 03.1.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு 21 தோப்பு குளத்தின் சுற்று பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி மற்றும் குளத்தின் நான்கு கரைகளையும் ஸ்திரப்படுத்தும் பணி | 4,90,000/– | திரு. S. சந்தோஷ் ஒப்பந்ததாரர் மயிலாடுதுறை | **407335/– (-) 0.65% குறைவு** | திரு. S. சந்தோஷ் ஒப்பந்ததாரர் மயிலாடுதுறை |
| | | | திரு. முத்துசாமி ஒப்பந்ததாரர் மயிலாடுதுறை | **410902/– (+) 0.22% அதிகம்** | |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு. S. சந்தோஷ் அவர்கள் 0.65% மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் வழங்கியுள்ளதை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 612. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**40).** மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் விநியோகப்பணியில் முடிகண்டநல்லூர் தலைமை பணியிடத்தில் நீர் ஆதாரத்திற்காக நீரேற்று நிலையம் அருகே தடுப்புகள் அமைக்கும்பணி மற்றும் தலை நீரேற்று நிலைய பராமரிப்பு பணிகளுக்காக ரூ.9.90 லட்டம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற 03.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்காணும் விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் விநியோகப்பணியில் முடிகண்டநல்லூர் தலைமை பணியிடத்தில் நீர் ஆதாரத்திற்காக நீரேற்று நிலையம் அருகே தடுப்புகள் அமைக்கும்பணி மற்றும் தலை நீரேற்று நிலைய பராமரிப்பு பணி | 8,20,000/– | திரு. S. சந்தோஷ் ஒப்பந்ததாரர் மயிலாடுதுறை | 8,16,720/– **(-) 0.40%** **குறைவு** | திரு. S. சந்தோஷ் ஒப்பந்ததாரர் மயிலாடுதுறை |
| | | | திரு. முத்துசாமி ஒப்பந்ததாரர் மயிலாடுதுறை | 8,25,740/– (+) **0.70%** **அதிகம்** | |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு. S. சந்தோஷ் அவர்கள் 0.65% மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் வழங்கியுள்ளதை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 613. நாள்: 07.11.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**41)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:2, பிளாக் எண்:3,7 மற்றும் 8 , நகரளவை எண்கள் 180 பாகம், 184/1 ஏ, 185 பாகம் மற்றும் 96 பாகம் ஆகியவற்றில் மொத்தம் 13.72 ஏக்கர் நிலத்தினை, தருமபுரம் ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி , மயிலாடுதுறை நிர்வாகத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்கி நிலம் ஒப்படைத்தது தொடர்பாக. அரசாணை (நிலை) எண்:82 உயர் கல்வி (டி1) துறை,நாள்:14.05.2019, மற்றும் அரசாணை (நிலை) எண்:57, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(MA.V(1) துறை, நாள்:23.05.2020. ஆகிய அரசாணைகளின்படி நிலத்தினை மயிலாடுதுறை நகராட்சியால் தருமபுரம் ஞானம்பிகை அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு பத்திர பதிவு செய்து வழங்கிட கிரயத்தொகை ரூ.31,60,940/–க்கு ஒப்பளிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:57348/2018/டிபி4, நாள்:10.01.2021 , உத்தரவில் தெரிவித்துள்ளபடி, மேற்கண்ட கிரயத்தொகை ரூ.31,60,940/–ற்கான வங்கி வரைவோலை எண்.280503/SBI, மயிலாடுதுறை நாள்:28.12.2021–யினை தருமபுரம் ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி நிர்வாகத்திடமிருந்து பெற்றுக்கொண்டு நகராட்சி நிர்வாகத்தால் மயிலாடுதுறை எண்-1 இணை சார்பதிவாளர் பத்திர ஆவண பதிவு எண்:1132/2022, நாள்:16.05.2022 இன்படி கல்லூரி நிர்வாகத்தின் பெயரில் பத்திரப்பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு , தருமபுரம் ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரிக்கு கிரயம் செய்து வழங்கப்பட்ட பின்வரும் நகரளவைகளில் உள்ள, நிலத்தில் வார்டு எண்:2, பிளாக் எண்:3, நகரளவு எண்:96 பகுதியில் 0.32 ஏக்கர் மற்றும் வார்டு எண்:2, பிளாக் எண்:8, நகரளவு எண்:184/1 ஏ, பகுதியில் 2.79 ஏக்கர், நகரளவு எண்:185 இல் 2.21 ஏக்கர், மொத்தம் 5.32 ஏக்கர், நிலம் மாணவர்கள் விளையாட்டு திடலாக , தற்போது கல்லூரி நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில், தற்போது மயிலாடுதுறை தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு , மயிலாடுதுறை நகரம் அதன் தலைமை இடமாக செயல்பாட்டு வருகிறது. தற்போது மயிலாடுதுறை நகராட்சியும், சிறப்புநிலை நகராட்சியாக அறிவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ள நிலையில் , மருத்துவ மனைகள், நகராட்சி அலுவலக கட்டிடங்கள் மற்றும் மக்கள் பயன்பாட்டு கட்டிடங்கள் ஆகியவை அமைப்பதற்கு, நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏற்ற இடங்கள் தற்போது இல்லை.

எனவே, மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமாக இருந்து, 16.052 2022/ல் கிரயம் செய்த கொடுக்கப்பட்ட ஞானாம்பிகை கல்லூரி வாளாகத்தில் கல்லூரி பயன்பாட்டில் வார்டு எண்:2, பிளாக் எண்:8, நகரளவு எண்:185 இல் உள்ள 2.21 ஏக்கர், நிலத்தினை நகராட்சியின் பயன்பாட்டிற்காக நிலப்பெயர் மாற்றம் செய்திடவும், அதற்குரிய தொகையினை கல்லூரி நிர்வாகத்தினரிடம் வழங்கிடவும் முன்மொழிவுகளை, நகராட்சி நிர்வாக இயக்குனர் மூலம், தமிழ்நாடு அரசிற்கு அனுப்பி வைத்திட மன்றத்தின் விழைவு அனுப்பிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.11714/2002/எப்1.**
**<u>மன்றத் தீர்மானம் எண். 614. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**42)** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் பராமரிப்பினை மேற்கொள்ள MAWS Department GO (ms) 113 நாள் 07.08.2022–ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற வேண்டும். இந்நகராட்சியில் அடைப்புகள் நீக்கும் வாகனம், கழிவு நீர் உறிஞ்சும் வாகம் உள்ளதால் O&M பணியில் கழிவு நீர் உறிஞ்சும் வாகனம் வாடகை அடிப்படையில் வைத்துக்கொள்ள வழிவகை இல்லை. இந்நகராட்சியின் பாதாளசாக்கடை திட்ட இயக்குதல் பணியில் பல தொழில்நுட்ப கூறுகளால் தினசரி பல இடங்களில் ஆய்வுக்குழிகளில் அடைப்பு, கழிவு நீர்வடிதல் ஏற்பட்டு வருவதாலும், எதிர்வரும் பருவமழை காலத்தில் கூடுதலான மழைநீரால் ஆய்வுக்குழிகளில் வெளிவரும் கழிவு நீரை உடனுக்குடன் உறிஞ்சும் வகையில் நவம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் –2024 வரை மூன்று மாதங்களுக்கு இரண்டு எண்கள் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்களை வாடகை அடிப்படையில் பயன்படுத்த அனுமதியும், அதற்கான மதிப்பீட்டு செலவினம் ரூ.7,50,000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இப்பணிக்கான செலவினத்தினை 2023–2024–ம் நிதியாண்டு பொதுநிதி வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 615. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**43)** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியில் 7 கழிவு நீர் உந்து நிலையம், 8 கழிவு நீரேற்று நிலையங்கள் உள்ளன. கடந்த 2008 –ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இந்த திட்ட இயக்குதல் பணியில் திடக்கழிவுகள், இயற்கை இடர்பாடுகள் மற்றும் மின்னழுத்த வேறுபாடுகள் காரணமாக Non clog submersible motor pumpகள் பழுது ஏற்பட்டு பழுது நீக்கம் பல முறை செய்யப்பட்ட நிலையில் தற்போது செயல்திறனற்று உள்ளன. மேற்கூறிய விவப்படி 15 நிலையங்களிலும் ஒரு மோட்டார் மட்டுமே இயங்குகின்றது. Stand by இல்லாத நிலையில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் கழிவு நீரேற்று நிலையங்களின் அருகே கழிவு நீர் ஆய்வு குழிகளில் மிகுதியான கழிவு நீர் வெளியேற்றம் ஏற்படுகிறது. தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது வழங்கப்பட்ட அறிவுரைகள்படி நகரின் சுகாதார நலன் சீராக நடைபெற பாதாளசாக்கடை திட்ட இயக்குதல் பணிக்கு Stand by மோட்டார் பம்ப்கள் கொள்முதல் செய்து பொருத்த வேண்டியுள்ளன. எனவே பணியின் அவசியம் கருதி இப்பணிக்கு 30HP, 20HP மோட்டார்கள் தலா ஒரு எண்ணிக்கையும், 10HP மோட்டார் பம்ப்கள் 2 எண்ணிக்கையும், 8HP, 5HP மோட்டார் பம்ப்கள் தலா ஒன்றும் வாங்கும் பணிக்கும், பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.38.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணிக்கான செலவினத்தை 2023–2024 –ஆம் நிதியாண்டு பொது வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 616. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**44).** மயிலாடுதுறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் விதி 2016ன்படி தினசரி நகரில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் என தரம்பிரித்து வாங்குவதில் வரக்கூடிய மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் தனியார் சிமெண்ட் தொழிற்சாலைகள் நிறுவனத்திற்கு எரிப்பொருளுக்காக அனுப்பப்பட்டது. தற்போது அந்நிறுவனம் வருடாந்திர பராமரிப்பு பணி நடைபெறுவதால் பிளாஸ்டிக் கழிவுகளை அனுப்ப முடியாமல் அதிக அளவில் தேக்கம் அடைந்துவிட்டது. எனவே நகராட்சி மினி டிப்பர் லாரியில் 3 அல்லது 4 MT கொள்ளளவுதான் பிளாஸ்டிக்கழிவுகளை ஏற்றமுடிகிறது. கூடுதலாக தனியார் லாரி மூலம் வாடகைக்கு (அதிக கொள்ளளவு உள்ளவை) அமர்த்தி பிளாஸ்டிக் கழிவுகளை மேற்கண்ட நிறுவனத்திற்கு அனுப்பிட உத்தேச செலவினம் ரூபாய் 5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.571 நாள்:27.09.2023 –ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்போது வரை வண்டிபேட்டையில் தேங்கி இருந்த மக்காத குப்பைகள் மட்டுமே 29 நடை டாரஸ் வண்டியில் நடை ஒன்றிற்கு 9 டன் முதல் 12 டன் வரை அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் வண்டிபேட்டையில் மக்காத குப்பைகள் மலை போல் தேங்கி உள்ளது. அதுபோக ஆனதாண்டவபுரம் ரோடு உரக்கிடங்கிலும், திம்மன்நாயக்கன் படித்துறையிலும் மக்காத பிளாஸ்டிக் கழிவு தேங்கி உள்ளது. மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் 20.10.2023 –ம் தேதிய நேரடி கள ஆய்வில் மேற்கண்ட இடங்களில் மலை போல் தேங்கி உள்ள மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை உடனடியாக அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்கண்ட 3 இடங்களில் தேங்கி உள்ள மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்புவதற்கு இன்னும் கூடுதலாக உத்தேசமாக 27 நடை வரை அனுப்ப வேண்டிய சூழல் இருப்பதால் கூடுதல் செலவின தொகை ரூ.7.00 இலட்சத்திற்கும் இதனை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:4794/2023/எச்1**
**மன்றத் தீர்மானம் எண். 617. நாள்: 07.11.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**45).** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.16இல் அமைந்துள்ள அரசு பெரியார் மருத்துவமனை வளாகத்தில் இந்நகராட்சியின் மூலம் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க திட்டம் 2021–ன் கீழ் நோயளிகளுடன் உடன் வருவோர் தங்கும் சிறப்பு கட்டடம் ரூ.72.00 இலட்ச மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு தமிழக முதல்வர் அவர்களின் கைகளால் திறந்து வைக்கப்ட உள்ள நிலையில் மேற்படி சிறப்பு தங்கும் கட்டடத்தை கண்காணித்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க திட்ட அனுமதி வழங்கும் ஏழாம் நிலை கூட்ட தீர்மானத்தில் M/S.VERTUE, தொண்டு நிறுவனம், திருவாரூர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, இப்பொருள் மூலம் மேற்படி தொண்டு நிறுவனம் தனக்கு 21.08.2022 அன்று செயற்பாட்டிற்கான உத்திரவினை வழங்கிட கோரி இந்நகராட்சியில் விண்ணபம் அளித்துள்ளது

தற்சமயம் மேற்படி M/S.VERTUE, தொண்டு நிறுவனம், திருவாரூர் தஞ்சாவூர் மண்டலத்தில் உள்ள பல நகராட்சிகளில் மேற்படி சிறப்பு கட்டடத்தை கண்காணித்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வருவதால் இந்நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள கட்டத்தை கண்காணித்திட 03.11.2023அன்று தகுதியுள்ள தன்னார்வள தொண்டு நிறுவனங்களிடமிருந்து விருப்ப அழைப்பு கோரப்பட்டதில் கீழ் கண்ட விபரப்படி இரண்டு நிறுவனங்களிடமிருந்து விருப்ப அழைப்புகள் வரப்பெற்றுள்ளது அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | விருப்ப அழைப்பு வழங்கியுள்ள நிறுவனத்தின் விபரம். |
|---|---|
| 1. | **M/S.Annai Kamsalai Educational Charitable Trust, MIG 519, Kurinji Street, Thanjaur-613005.** |
| 2. | **M/S.Vittal Educational Trust, No.22A. ST.Pauls's Complex, Bharathiyar Salai Contonment. Trichy-620001.** |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் விருப்ப அழைப்புகளை கூறாய்வு செய்ததில் வ.எண்.1இல் குறிப்பிட்டுள்ள M/S.Annai Kamsalai Educational Charitable Trust, MIG 519, Kurinji Street, Thanjaur-613005. நிறுவனம் தகுதி பெற்றுள்ளது எனவே கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி நோயளிகளுடன் உடன் வருவோர் தங்கும் சிறப்பு கட்டடத்தை கண்காணித்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1). நகராட்சியால் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப விடுதியில் தங்கும் பயனர்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுக்க வேண்டும். தங்கியிருக்கும் நபர்கள் அனைவரும் சரியான நேரத்திற்கு விடுதிக்குள் வந்து செல்வதை சரிபார்க்க ஒரு பொறுப்பாளரை நியமித்து கண்காணிக்க வேண்டும்.

2) நகராட்சி ஆணையர் மற்றும் NGO ஆகிய இருவரும் புரிந்துணர்வு ஒப்பந்தப்பத்திரம் செய்து கொள்ள வேண்டும் எனவும் அவற்றை புதுப்பித்திருக்க வேண்டும்.

3) Shelter Management committee formation complete செய்து முதல் கூட்டம் நடத்தப்பட வேண்டும் .

4) மருத்துவமனை சிறப்பு விடுதியில் (Hospital special Shelter) விடுதிக்கு வரும் நபர்களுக்கு மருத்துவமனையின் உள் நோயாளி உள்ளனர் என்பதற்கான ரசீது கொடுத்து "ரசீது எண், தேதி போன்றவற்றை ஒரு பதிவேட்டில் குறித்து வைத்து பதிவேடு பராமறிக்கப்பட வேண்டும் என்றும். Patient தொடர்புகொள்ளுகும் வகையில் தொலைபேசி எண்களை வாங்கி கொள்ள வேண்டும் மருத்துவமனையிலிருந்து அவர்களின் உடல்நலம் சரியாகி வெளியே செல்லும் நோயாளிகளிடம் அவர்கள் போகும் போது தேவையான தகவல்களை வாங்கி கொள்ள வேண்டும்.

5) வெளி நபர் யாரேனும் வந்து தங்கினால் அவர்கள் எத்தனை நாட்கள் தங்குகிறார்களோ அத்தனை நாட்களுக்கு ஏற்ற வகையில் தொகை வசூல் செய்ய வேண்டும்.

6) தினசரி பதிவேட்டில் இன்று எத்தனை பயனர்கள் தங்கி இருக்கிறார்கள் என்பதற்கான விவரங்களை பதிவு செய்து நகராட்சிக்கு தகவல் அளிக்க வேண்டும்.

7) தகவல் பலகை ஒன்று தயார் செய்து வைத்து அதில் ஒரு நபர்களுக்கு ஒரு நாளைக்கு தங்குவதற்கு எவ்வளவு தொகை விவரம் குறிப்பிடப்பட வேண்டும்.

8) வெளி நோயாளியாக இருந்தால் பாத்ரூம் மட்டும் உபயோகப்படுத்தி கொள்வதாக. கூறினாலும் அதற்கும் தொகை வசூல் செய்ய வேண்டும்.

10) நகராட்சி ஆணையர் பெயரில் கட்டட பராமரிப்பு பணிகளுக்காக வங்கி கணக்கு துவங்கி அதில் பணம் செலுத்துவதை கண்காணிக்க மருத்துவமனைக்கு அருகில் இருக்கும் வங்கியில் வங்கி கணக்கு துவங்க வேண்டும் ,

11) தங்கும் விடுதியில் தங்கும் நபர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், துணிகளை துவைத்து காய வைப்பதற்கு தேவையான கொடி கயிறுகள் அமைப்பதற்கான இடம் கட்டாயம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

12) அரசு விதிகளின்படியோ, நகர்மன்றம் மற்றும் ஆணையாளரின் முடிவுபடியோ செயல்படாமல் ஒப்பந்தகாலத்தில் புகார் ஏற்படின், தங்களது ஒப்பந்தத்தினை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

13) ஒப்பந்த உடன்படிக்கையின்படி பணி செய்யாமல் இடையில் நிறுத்திவிட்டால் தங்களது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, வேறு ஒரு தொண்டு நிறுவனத்திற்கு பணி வழங்கப்படும்.

14) இவ்உத்தரவு ஆறுமாதம் காலம் வரை மட்டுமே செல்லத்தக்கது. ஒப்பந்த நிறுவனத்தின்செயல்பாட்டினை பொறுத்தே ஒப்பந்தகாலத்தினை நகர்மன்றத்தின் அனுமதியுடன் நீட்டிப்பு செய்யப்படும்.

எனவே, மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி செயல்படவும் அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறும் அறிவிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 0053–1/2021/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 618. நாள்: 07.11.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**46).** இந்நகராட்சி நிர்வாக அலுவலக பிரதான புதிய கட்டிட வளாகத்தின் இரண்டாவது மாடி தரை பகுதியில் Weather proof அமைக்கப்படாமல் உள்ளதால் மழை காலங்களில் நீர் தேக்கம் ஏற்பட்டு முதல் தள Roof slab சில இடங்களில் நீர் கசிவு ஏற்படுகின்றன இந்த நிலை தொடர்ந்தால் கட்டிடத்தின் Rain force merg பலவீனமடைந்து ஆயுட்காலம் குறைவடைய வாய்ப்புள்ளன. எனவே இக்குறைபாட்டிற்கு இரண்டாவது தளத்திற்கு Weathering coarse வசதி செய்து நீர் கசிவினை தடுக்கும் பணி, மேலும் பொது சுகாதாரபிரிவில் உள்ள பரப்புரையாளர்கள், டெங்கு விழிப்புணர்வு பணியாளர்களுக்கு ஆய்வுக்கூட்டம் நடத்த போதிய இடவசதி தரைதளம் மற்றும் முதல்தளத்தில் இல்லாததால் இரண்டாவது தளத்தின் பகுதி இடத்தில் இடர் காப்பு மேல்கூரை அமைத்து ஆய்வு கூட்டரங்கம் வசதி மேற்கொள்ள வேண்டியுள்ளன. இப்பணிகள் மேற்கொள்ளவும், பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.18.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இப்பணிக்கான செலவினத்தினை2023–2024 பொது வரவு செலவு பட்டிலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 619. நாள்: 07.11.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**47).** மயிலாடுதுறை நகராட்சியின் நிர்வாக அலுவலக பிரதான கட்டிட வளாகத்தின் சுற்று மற்றும் உள்கட்டமைப்பு சுவர்களின் வர்ணபூச்சு நேர்த்தியின்றி உள்ளன. தரைதளத்தில் நகர்மன்ற தலைவர் அறையில் உள்ள கழிவறையிலும், பழைய பொது கழிவறையிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன. எனவே அலுவலக புதிய கட்டிடத்தின் அனைத்து பகுதிகளிலும் வர்ண பூச்சு மேற்கொள்ளும் பணி, கழிவறைகள் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.16.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இப்பணிக்கான செலவினத்தை 2023–2024 –ஆம் நிதியாண்டு பொது நிதி வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 620. நாள்: 07.11.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**48).** இந்நகராட்சிக்குட்பட்ட **36** வார்டு பகுதிகளில் அமைந்துள்ள **26,329** குடியிருப்புகள் மற்றும் நகர்பகுதிகளில் அமைந்துள்ள **4600** வணிக நிறுவனங்களிலிருந்து தினசரி **15.95** மெட்ரிக் டன் அளவிற்கு மக்கும் குப்பைகள் உருவாகிறது. மக்கும் குப்பைகளை நகர் பகுதிகளில் கீழ்க்கண்ட **3** இடங்களில் அமைந்துள்ள நுண் உரமாக்கும் மையம் (Micro Compost Center) மூலம் உரமாக்குவதற்கான செயல்முறைகள் நடைமுறைபடுத்தப்பட்டு **45** முதல் **50** தினங்களில் உரமாக மாற்றப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | வண்டிப்பேட்டை | 5 □□□ |
| 2 | திம்மன் நாயக்கன் படித்துறை | 5 □□□ |
| 3 | ஆனதண்டபுரம் ரோடு | 5 டன் |

மேற்கண்ட நுண்உரமாக்கும் மையங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கு E.M.S. Solution நுண்ணுயிர் திரவம் தயாரிப்பு செய்து இருப்பு வைத்திட, **130** லிட்டர் மூடியுடன் கூடிய பேரல்கள் **15** எண்ணிக்கை தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச செலவின தொகை ரூ.**35,000** –க்கும் பொது நிதியிலிருந்து செலவிடுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5579/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 621. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**49).** மயிலாடுதுறை மாவட்டத்தின் தலைநகராக உள்ள மயிலாடுதுறை நகரமானது சிறப்புநிலை நகராட்சியாக உள்ளது. இச்சிறப்புநிலை நகராட்சியில் **36** வார்டுகள் உள்ளன. **26,329** குடியிருப்புகளும் **1744** பெருவணிக நிறுவனங்களும், **2,618** சிறுவணிக நிறுவனங்களும் அமையப்பெற்றுள்ளன. மேலும் இந்நகரில் **2** அரசு கலைக்கல்லூரிகளும், **14** நகராட்சி பள்ளிகளும், **26** தனியார் பள்ளிகளும் உள்ளன.

இந்நகரில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் **2016** பிரிவு **4(1)**ன் பிரகாரம் குடியிருப்புகளில் உருவாகும் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வீடு தேடி வரும் தூய்மைப்பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். மயிலாடுதுறை நகரில் கூட்டு அடுக்குமாடி குடியிருப்புகள் (Complex) அதிக எண்ணிக்கையில் உள்ளது. மேற்படி அடுக்குமாடி குடியிருப்புகளில் இருப்பவர்கள் குப்பைகளை பிரித்து வழங்கும் பழக்கம் இல்லாமல் மொத்தமாக பாலித்தீன் பைகளில் கட்டி கட்டி தெருக்களில் போட்டு விடுகிறார்கள். மேலும் சில வார்டுகளில் உள்ள வீடுகளில் கொல்லைபுறம் நீளமாக இருப்பதாலும் வீட்டில் உருவாகும் குப்பைகளை பிரிக்காமல் பின்பக்கத்தில் போட்டு மொத்த மொத்தமாக சேர்த்து கொடுக்கிறார்கள். இந்நகராட்சியில் குடிசைப் பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள வரதாச்சாரியார் தெரு, உள்கேணி, கலைஞர் காலனி, தனியூர் குடியிருப்பு, இந்திரா நகர், அவையாம்பாள்புரம், சின்ன மாரியம்மன் கோவில் தெரு, அம்பேத்கர் நகர், ஹாஜியார் நகர்– ஆற்றங்கரை தெரு, ஆரோக்கியநாதபுரம், எரக்கலி தெரு, வடக்கு புது தெரு, தெற்கு புது தெரு, தூக்கனாங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் தினசரி குடியிருப்பு பகுதிகளில் உருவாகும் குப்பைகளை வீடுகளிலே மக்கும், மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்கும் பழக்கத்தை தொடர்ந்து ஏற்படுத்திடும் பொருட்டும், வளர்ந்து வரும் இம்மாநகரை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கும் பொருட்டும் இந்நகரில் அமைந்துள்ள **26,329** குடியிருப்புகளுக்கும் தினசரி உருவாகும் குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகள் என தனிதனியாக தரம் பிரித்து வீடு தேடி வரும் தூய்மைப்பணியாளர்களிடம் ஒப்படைக்கும் பொருட்டும் தூய்மைப்பணியாளர்களின் பணி சுமையை குறைக்கும் பொருட்டும், மக்கும் குப்பையை முழுமையாக சேகரித்து உரமாக்கவும், மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக முழுமையாக சேகரித்து சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்புவதற்கும், ஒவ்வொரு வீட்டிற்கும் பச்சை நிற கூடை ஒன்றும், நீல நிற கூடை ஒன்றும் வழங்குவது அவசிய தேவையாக உள்ளது.

ஆகவே மேற்கண்டவாறு ஒவ்வொரு வீட்டிற்கும் பச்சை நிற கூடை ஒன்றும், நீல நிற கூடை ஒன்றும் வழங்குவதற்கு, இம்மாவட்டத்தில் உள்ள பெரிய நிறுவனத்திடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக சமூக பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ் பெறுவதற்கு கருத்துரு அனுப்புவதற்கும், நகரில் உள்ள நிறுவனங்களின் மூலம் சமூக பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ் பெறுவதற்கும், நகரில் முக்கியஸ்தவர்கள் மூலம் பெறுவதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்

**ந.க.எண். 4626/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 622. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**50).** மயிலாடுதுறை மாவட்டத்தின் தலைநகரான மயிலாடுதுறை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் பராமரிக்கப்பட்டு வரும் தரங்கம்பாடி சாலையில் அரசின் சிறப்பு திட்ட செயலாக்கப்பணிகளில் ஒன்றான நடைபயிற்சி விழிப்புணர்வு பேரணி மாதந்தோறும் நடைபெற்று வருகின்றன. இந்த நிகழ்வுக்கு அரசு அலுவலகர்கள் மற்றும் பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் பெரும் திரளாக கலந்து கொள்கின்றனர். தொடர்ந்து இந்நிகழ்வு நடைபெற உள்ளதால் இந்த சாலையில் ஏற்கனவே உள்ள ஐந்து பேருந்துகள் நிறுத்த நிழற்குடிகளில் இருக்கை வசதிகள் மற்றும் மேல் கூரையின்றி தரைதள இருக்கைகள் **16** எண்கள் புதிதாக அமைக்க வேண்டும். இப்பணிகள் மேற்கொள்ளவும், பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. **8,50,000/–** க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தை 2023–24–ம் நிதியாண்டு பொது வரவு செலுவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 623. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**51).** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பில் உள்ள கழிவு நீரேற்று நிலையம் **2,4,6,8A** மற்றும் தற்காலிக கழிவு நீர் உந்து நிலையம் காந்திஜி சாலையில் உள்ள Non clog நீர் உமூழ்கி இறைப்பான்கள் மின்னழுத்த வேறுபாடு மற்றும் திடக்கழிவுகளால் கூடுதல் வெப்பநிலை அடைந்து மோட்டார் வைன்டிங் பழுதடைந்ததோடு பம்புகளின் mechanic Bush - களும் பழுதாகியுள்ளன. 20HP-1, 20HP-2, 10HP-3, 8HP-1 ஆகிய கழிவு நீரேற்று மோட்டார் பம்புகள் இயக்க இயலாத நிலை உள்ளன. பழுதான நான்கு பாதாள சாக்கடை திட்ட மோட்டார் பம்ப்களை பழுது நீக்கும் பணிக்கும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. **5,50,000/–** க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தை 2023–24–ம் நிதியாண்டு பொது வரவு செலுவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 624. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**

**52).** இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறை அவர்களின் கடித ந.க.எண்.**1640395**/VCII/S2/2023 நாள்:**13.11.2023** –ல் அறிவுறுத்தியுள்ளபடி, வடகிழக்கு பருவ மழை நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக பூச்சிகளினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு புகை அடிக்கும் கைத்தெளிப்பான்களை (Indoor Mini Hand Fogging Machine) இயக்குவதற்கு தேவையான எரிவாயு கேன் 200 எண்ணிக்கை தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச செலவின தொகை ரூ.**60,000**–க்கும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் இதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:4258/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 625. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கப்பட்டது.**



**53).** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிப்புரிந்து கொண்டிருக்கும் 102 நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு பசுமை நுண்ணுரமாக்கும் மையங்களில் மக்கும் கழிவுகளை அரைப்பதற்கும், அரைக்கப்பட்ட கழிவுகளை தொட்டிகளில் சேர்ப்பதற்கும், வள மீட்பு மையங்களில் மக்காத மற்றும் சுழற்சி கழிவுகளை கையாளுவதற்கும், மழை நீர் வடிகால் மற்றும் கழிவு நீர் வடிகால்களில் தேங்கி உள்ள குப்பைகளை அகற்றுவதற்கும், வாறுகால்களை தூர்வாருவதற்கும், பொது கழிப்பறைகள் மற்றும் சமூதாய கழிப்பறைகளை பராமரிப்பதற்கும் உள்ளிட்ட பணிகளில் பணி செய்து கொண்டிருக்கீறார்கள். ஆகவே மேற்படி பணிகளில் ஈடுப்பட்டுள்ள 102 நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட விதி 2016 –ன் படி பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். மேற்படி தூய்மைப்பணியாளர்களுக்கு முதற்கட்டமாக ஒவ்வொரு தூய்மைப்பணியாளர்களுக்கும் கையுறைகள் 2 செட் வீதம் 204 செட் வாங்கி வழங்குவதற்கும் இதற்கான உத்தேச செலவின தொகை ரூ.65,000 –க்கும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் இதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:4259/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 626. நாள்: 07.11.2023</u>**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது.**

**நாள்: 03.11.2023**

**நகர்மன்றத்தலைவர்,**
**மயிலாடுதுறை நகராட்சி.**